**கனோவின் ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

கனோவின் ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் (“கம்பனி”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு கம்பனி அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வாளரின் நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | உயர் மட்ட முகாமைத்துவத்தின் அனுமதியின்றி சரிபார்த்தலிற்காக நாட்குறிப்பு பதிவுகளை உள்ளடக்கி நியமமற்ற பொதுநாட்குறிப்புக்கள் முறைமைக்கு சேர்க்கப்பட்டிருந்தது. | அத்தகைய நடவடிக்கைகளுக்காக கணக்காளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டதுடன் குறித்த விடயம் தொடர்பாக ஏதாவது தெளிவுபடுத்தல்கள், உதவி, அறிவுரை அல்லது அனுமதி தேவைப்பட்டால் அவர் எம்டி, தலைவர் அல்லது | உள்ளக்க கட்டுப்பாட்டு முறைமைகள் பலப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இயக்குனர் சபையுடன் கலந்துரையாடுவார். | |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டிலிருந்து 2023 யூலை வரையிலும் 55 பெறுகைகளிற்காக காசு அடிப்படையில் ரூபா 4,113,720 செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க, சில்லறைக்காசு எல்லையினை விஞ்சி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் காசினை கையாளுகையில் கட்டுப்பாட்டு இடரிருந்தது. | இணங்கப்பட்டது. 24 மணித்தியாலங்களும் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியான சேவையினை வழங்குவதற்கு கடமைப்பட்டிருப்பதுடன் உபகரணத்தின் தவறுகள் அல்லது உடைந்தமை உடனடியாக மீள்செலுத்தப்பட வேண்டும். மேலும், கொடுப்பனவிற்காக காசோலைகளை ஏற்றுக்கொள்வதற்கு வழங்குனர்கள் தயக்கம் காட்டியதுடன் அவர்கள் காசுக் கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு வேண்டப்பட்டிருந்தனர். ஆகையால், தேவையான பொருட்கள் பெறுகைச் செய்முறையைப் பின்பற்றிய பின்னர் காசினைச் செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டது. | - மேற்படி - |

### 1.5.2 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்துடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பந்தி 51 இன் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாமையால் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் முழுமையாக பெறுமதிசெய்யப்பட்டு தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 6,082,532 கிரயமான சொத்துக்களின் பயன்தரு காலம் மீதான மதிப்பிடப்பட்ட வழுக்கள் சீராக்கப்படாததுடன் கொண்டுசெல்லும் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டதுடன் முழுமையாகப் பெறுமதி செய்ய்ப்பட்ட சொத்துக்களின் பயன்தரு ஆயட்காலம் மீள்மதிப்பீடு செய்யப்படுவதுடன் பரீட்சிப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு ரூபா 121,676,022 ஆகவிருந்ததுடன் கம்பனியின் கணிப்பீட்டின் பிரகாரம் இது ரூபா 121,020,562 ஆகவிருந்தது. ஆகையால், ரூபா 655,460 வித்தியாசம் கணக்காய்வில் | ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன். இந்த விடயம் தொடர்பில் உள்ளக பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டது. இறுதி கணக்குகளை வரிப் பட்டியலுக்கு இணைக்கும் | சரியான முறையில் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பினை கணிப்பீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அவதானிக்கப்பட்டது. மேலும், ரூபா 21,923 குறிப்பு 15.1 ஆம் குறிப்பின் ஒப்பிடக்கூடிய எண்ணிக்கையில் அவதானிக்கப்பட்டது. | போது ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சனையால் இது ஏற்பட்டிருந்தது. |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்தவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| கார்கில்ஸ் செலோன் பொதுக்கம்பனியின் ரூபா 1,663,200 மீள்நிதியளிக்கப்படாத வைப்புக்கள் வாடகைக்கிருப்பவர்களிருந்தான மீள்நிதியளிக்கக்கூடிய வைப்புக்களில் உள்ளக்கப்பட்டிருந்தது. | கம்பனியின் கணக்கீட்டு முறைமையானது மீள்நிதியளிக்கமுடியாத வைப்பாக இதனை காட்டுகின்றபோதும் இது 2011 இல் ஆரம்ப மீதி உரிமையாண்மையிடமிருந்து உருவாக்கப்பட்டது. எனினும், கம்பனியானது மீள்நிதியளிக்க்கூடிய வைப்புக்களை மட்டும் ஏற்கின்றது. | மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) குத்தகைக்காரர்களுடனான குத்தகை உடன்படிக்கைகள் | | | |
| I. | குத்தகைக்கு கொடுப்பவர்களின் அனுமதியில்லாமல் இடங்களையோ அல்லது எந்தப் பகுதிகளையும் குத்தகைக்கு எடுத்தவர் உப வாடகைக்கோ அல்லது உப குத்தகைக்கோ வழங்கமுடியாதபோதும் அந்த நடவடிக்கையை மேற்பார்வை செய்வதற்கு எந்தவித பொறிமுறையும் கம்பனி வைத்திருக்கவில்லை. | கம்பனியானது அந்த நடவடிக்கையை மேந்பார்வை செய்து அறிக்கையிடும் பொறுப்பை உதவி பொறியியலாளர் மற்றும் முகாமையாளர் - தொழிற்பாடு போன்றோருக்கு வழங்கியிருந்தது. | கம்பனியின் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் கம்பனியின் அனைத்து செயற்பாடுகளுக்கும் அதனை முகாமைத்துவம் செய்வதற்கும் பொறுப்பாகவிருக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| II. | | குத்தகைக்காரர் மற்றும் கனோவினிற்கு இடையிலான குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம், கனோவினால் நீர், மின்சாரம் மற்றும் ஏனைய பயன்பாடுகள் தொடர்பில் பயன்பாட்டு சிட்டை தங்த பின்னர் 07 நாட்களுக்குள் குத்தகைதாரர் அதற்குரிய கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டும். மேலும், அந்த உடன்படிக்கையின் பிரகாரம் காலாவதி திகதியில் அந்தச் சிட்டை செலுத்தப்படாத பட்சத்தில் அந்தக்காலத்தின் போது இணைப்புக்கள் துண்டிக்கப்படும். எனினும், 24 குத்தகைதாரர்களினால் சொல்லப்பட்ட காலப்பகுதிக்கு மேலாக ரூபா 27,430,097 நிலுவையாகவிருந்ததுடன் கம்பனியானது இணைப்பைத் துண்டிப்பதற்கோ நிலுவைகளை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுப்பதற்கு தவறியிருந்தது. | இணங்கப்பட்டதுடன் அந்தக் காலப்பகுதியின் போது பொருளாதார நெருக்கடியினை நாங்கள் எதிர்நோக்க வேண்டியதுடன் ஆகையால், குத்தகைதாரர் போதியளவு வருமானத்தை பெற்றிருக்கவில்லையென்பதுடன் சில வாடகைதாரர் அவர்களுடைய வணிகத்தின் நட்டம் காரணமாக வணகத்திலிருந்து விலகியிருந்தனர். அதனால், உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு வணிகம் நடாத்தப்படுகின்றதா என்பதை தீர்மானிக்க முடியாதிருந்தது. எனினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையாகவுள்ள மீதி குறிப்பிடத்தக்களவு கழிக்கப்பட்டிருந்தது. | குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தெற்கு அதிவேகபாதையின் பயணிகளுக்கு உணவுகள் மற்றும் பானங்களை வழங்குவதற்காக தனியாக ஒரு இடத்தினை 330.95 சதுர அடியினை உள்ளடக்கி இடத்தினை 10 வருடங்களிற்கு வழங்குவதற்காக 2019 மாரச் 29 இல் விறாஜா கை அக்கடமியுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை. | உடன்படிக்கையின் முக்கிய ஏற்பாடுகளுக்கு சில இணங்காமைகள் குத்தகைதாரரால் மெற்கொள்ளப்பட்டதுடன் கணக்காய்வு திகதி வரையில் இந்த இடம் கம்பனியால் உரிமையாக்கப்பட்டிருக்காததுடன் எந்தவித சட்ட நடவடிக்கையும் இது தெடர்பில் கம்பனியால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டதுடன் குத்தகைதாரரால் உடன்படிக்கை மீறப்பட்டமையால் விறாஜா கை அக்கடமியுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையை இடை நிறுத்துவதற்கு (துண்டிப்பதற்கு) சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2019 நவம்பர் 15 இல் கைச்சாத்திடப்பட்ட கனோவின் ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டிற்கும் பலவத்த வசந்த குமார காமகே (நெடுஞ்சாலை மருத்துவ மற்றும் கண் நிலையம்) 91 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையின் உறுப்புரிமை 8 (பி), (கியூ) p | குத்தகைக்கு வழங்கியவரின் முன் அனுமதயில்லாமல் இடங்களுக்கு குத்தகைதாரர் எந்தவித மாற்றமும் செய்யமுடியாதபோதும் ஏ பிரிவிலுள்ள வரவேற்றுப் பகுதியில் நெடுஞ்சாலை மருத்துவ மற்றும் கண் நிலையத்தின் சார்பாக தனியான கண்ணாடி முறைமை கட்டப்பட்டது. ஆனால், நெடுஞ்சாலை மருத்துவ மற்றும் கனோவின் கடிதத்தின் பிரகாரம் (CANO/CHAIRMAN/2022/1) அத்தகைய நிர்மாண செலவுகளை தாங்குபவர் யார் என்பதை கண்டுபிடிக்க முடியாதுள்ளது. கண்ணாடி முறைமையை நிர்மாணித்தல் தொடர்பான செலவீனங்களிற்குரிய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நெடுஞ்சாலை மருத்துவ மற்றும் கண்ணாடி போன்றவற்றிலிருந்து பெறவேண்டிய நிலுவைத்தொகை ரூபா 932,594 ஆகும் என அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டதுடன் இந்தக் கண்ணாடி முறைமை 2020 இற்கு முன்னர் கட்டப்பட்டதுடன் இது தொடர்பில் எந்தவித ஆவணங்களும் இருக்கவில்லை. நிலுவைத்தொகையை அறவிடுவதற்கு கோரல் கடிதம் அனுப்பப்பட்டது. குறிப்பிட்ட காலப்பகுதியில் குத்தகைதாரர் நிலுவை மீதியை செலுத்த தவறினால் சட்ட அலுவலரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

**1.8 வரிப்பிரமாணங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| 2021/2022 மதிப்பீட்டாண்டிற்கான வரித்திரும்பல்கள் 2023 மார்ச் 09 வரையிலும் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டதுடன் வருமான வரி சமர்ப்பித்தல் செய்முறை இறுதிக்கட்டத்திலுள்ளது. | காலவாதித்திகதிக்கு முன்னர் நிரப்பப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா. 97,426,232 இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 58,865,666 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா.38,560,566 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. நிதி வருமானம் அதிகரித்தமை மற்றும் முதலீட்டுச் சொத்தின் நியாய பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு முன்னேற்றத்திற்கான காரணங்களாகவிருந்தது.

### 2.2 முக்கிய வருமான செலவீன விடயங்களின் பகுப்பாய்வு

வருமானம், நிர்வாகச் செலவீனங்கள் மற்றும் தேறிய இலாபம்/(நட்டம்) மற்றும் கடந்த 05 வருடங்களிற்கான அதிகரிப்பு அல்லது குறைவு போறன்றவற்றின் பகுப்பாய்வு பின்வருமாறுள்ளது.

| நிதிக்கூற்றுக்களின் விடயம் | | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|---|---|---|
| வருமானம் | (ரூபா. 000) | 162,509 | 137,556 | 130,152 | 137,630 | 97,836 |
| வருமானத்தின் அதிகரிப்பு / குறைவு | (ரூபா. 000) | 24,953 | 7,404 | (7,478) | 39,794 | (1,971) |
| வருமானத்தின் வளர்ச்சி (குறைப்பு) | % | 18.14 | 5.7 | 5.4 | 40.7 | (1.8) |
| மொத்த இலாபம் | (ரூபா. 000) | 131,937 | 109,856 | 109,179 | 102,946 | 63,933 |
| மொத்த இலாபத்தின் அதிகரிப்பு / குறைவு | 000) | 22,081 | 677 | 6,233 | 39,013 | 2,172 |
| மொத்த இலாபத்தின் வளர்ச்சி (குறைப்பு) | % | 20.1 | 0.06 | 6.05 | 61.02 | 3.52 |
| நிர்வாகச் செலவீனங்கள் | (ரூபா. 000) | 5,547 | 2,290 | 747 | 5,303 | 17,266 |
| நிர்வாகச் செலவீனங்களின் அதிகரிப்பு/குறைப்பு | (ரூபா. 000) | 3,257 | 1,543 | (4,556) | (11,963) | 11,656 |
| நிர்வாகச் செலீனங்களின் வளர்ச்சி (குறைப்பு) | % | 142.23 | 206.56 | (85.91) | (69.29) | 207.77 |
| பெறுமானத்தேய்வு மற்றும் ஏனைய செலவீனங்கள் | (ரூபா. 000) | 45,074 | 12,455 | 15,511 | 17,801 | 15,913 |
| பெறுமானத்தேய்வு மற்றும் ஏனைய செலவீனங்களின் அதிகரிப்பு/குறைப்பு | (ரூபா. 000) | 32,619 | (3,056) | (2,290) | 1,888 | 1,799 |
| பெறுமானத்தேய்வு மற்றும் ஏனைய செலவீனங்களின் வளர்ச்சி (குறைப்பு) | % | 261.89 | (19.70) | (12.86) | 11.86 | 12.75 |
| தேறிய நிதி வருமானம் | (ரூபா. 000) | 58,776 | 43,506 | 60,070 | 64,609 | 44,289 |
| தேறிய நிதி வருமானத்தின் அதிகரிப்பு/குறைப்பு | (ரூபா. 000) | 15,270 | (16,564) | (3,999) | 19,780 | 8,895 |
| தேறிய நிதி வருமானத்தின் வளர்ச்சி (குறைப்பு) | % | 35.1 | 27.57 | (6.24) | 44.66 | 25.13 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வரிக்குப் பின்னரான இலாபம் | (ரூபா. 000) | 16,600 | 13,639 | 13,581 | 2,129 | 8,759 |
| வரிக்குப் பின்னரான இலாபத்தின் அதிகரிப்பு/குறைப்பு | (ரூபா. 000) | 2,961 | 58 | 11,452 | (6,630) | 6,841 |
| வரிக்குப் பின்னரான இலாபத்தின் வளர்ச்சி / (குறைப்பு) | % | 21.71 | 4.27 | 537.9 | (75.79) | 356.67 |
| வருமானம் | (ரூபா. 000) | 97,426 | 58,865 | 36,015 | 41,751 | 54,595 |
| வருமானத்தின் அதிகரிப்பு / குறைவு | (ரூபா. 000) | 38,561 | 22,850 | (5,736) | (12,844) | 5,225 |
| வருமானத்தின் வளர்ச்சி (குறைப்பு) | % | 65.51 | 63.45 | (13.74) | (23.53) | 142.84 |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | குத்தகைதாரருடனான குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம், குத்தகைதாரரர் பற்றுச்சீட்டு கிடைக்கப்பெற்று 14 நாட்களுக்குள் ஏதாவது சந்தர்ப்பத்தில் அடுத்துவரும் மாதத்தின் 20வது திகதிக்கு பிந்தாது அனைத்து நிலுவைகளையும் செலுத்த வேண்டும். எனினும், 17 குத்தகைதாரர்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 66,679,843 தொகையினை செலுத்தியிருக்கவில்லை. மேலும், பெறவேண்டிய கணக்குகளின் வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம், 11 குத்தகைதாரர்கள் 02 வருடங்களுக்கு மேலாக ரூபா 18,605,586 தொகையினையும் 07 குத்தகைதாரர்கள் 01 வருடம் தொடக்கம் 02 வருடங்கள் வரையிலான வருடங்களுக்கு மேலாக ரூபா 15,885,845 தொகையினையும் மேலதிக நடவடிக்கையினை எடுக்காமல் வைத்திருந்தனர். | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு சபையின் அதிகாரத்துடன் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. காலதாமதமாக்கப்பட்ட வாடகை கட்டணங்களுக்காக 2.5% இனை தண்டப்பணமாக அறவிடுதல். குறிப்பிடப்பட்ட திகதியில் சிட்டைகள் செலுத்தப்படாது விட்டால் இணைப்புக்கள் துண்டிக்கப்படுதல். மேலும், கம்பனியின் சட்டத்திணைக்களமானது நீண்டகால நிலுவை வாடகைதாரருக்காக கோரல் கடிதங்களை (எல்ஓடி) அனை அனுப்பியிருந்ததுடன் அதற்குப் பின்னரும் தீர்க்கப்படாது விட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | குத்தகைதாரருடனான குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம், குத்தகைதாரர் மாதாந்த குத்தகைக் மூன்று மாதத்திற்கு தொடர்ச்சியாக கட்டணத்தை கட்டத் தவறினால் வாடகை உடன்படிக்கை தானாக இல்லாமல் போவதுடன் பிணைவைப்பு திரும்பப் பெறப்படும். எனினும், பிணை வைப்பினை திரும்பப் பெறுவதற்கோ வணிகத்தினை கைவிட்ட 02 வாடகைதாரரிடமிருந்து மிகுதித் தொகையை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பிரிவானது புதிதாக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளில் மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ளது. முன்பு கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் இந்தப் பிரிவு இருக்கவில்லை. | குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஆரம்பத்திட்டத்தின் பிரகாரம், பச்சை எண்ணக்கருவுடன் மேல்ப்பரப்பிலுள்ள திறந்த பிரதேசத்தில் மரங்களை நடுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டது. எனினும், ஆரம்பத்திலிருந்து கம்பனியால் இது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. | ஆரம்பத்திட்டத்துடன் இணங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டிற்காக சுரங்கப்பாதை தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா 45,847,479 ஆகவிருந்தது. எனினும், மூலப்பொருள், ஊழியம், விசுவாசம் மற்றும் ஏனையவற்றிலிருந்து பெறப்பட்ட மொத்த செயற்பாட்டுக் கிரயம் ரூபா 46,268,500 ஆகவிருந்தது. கம்பனியானது 2022 ஆம் ஆண்டின் போது சுரங்கப்பாதை தொழிற்பாடுகளிலிருந்து ரூபா 421,021 நட்டத்தினை விளைவித்திருந்தது. இத்தகைய பிரான்சிஸ் கம்பனியிடமிருந்து பெறப்பட்ட அத்தகைய குறைந்த வருமானம் கம்பனிக்கு நிதிரீதியில் சாத்தியமற்றதாகவிருந்தது. | இணங்கப்பட்டதுடன் இயக்குனர் சபைக் கூட்டங்களில் சபையானது எவ்வாறு இதனை இலாகரமாக மாற்றுவது என கலந்தாலோசித்தது. நீண்டகாலத்திற்கு இது சாத்தியமற்றிருந்தால் சுரங்கப்பாதை தொழிற்பாடுகள் மூடுவது தொடர்பில் சட்ட ஆலோசனை எடுத்த பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். | சுரங்கப்பாதை தொழிற்பாட்டை இலாபம் ஈட்டக்கூடிய நிறுவனமாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் கடந்த ஐந்து வருடங்களிற்கான சில முக்கிய விகிதங்கள் பின்வருமாறுள்ளது.

| **விகிதங்கள்** | **2022** | **2021** | **2020** | **2019** | **2018** |
|---|---|---|---|---|---|
| மொத்தலாப விகிதம் % | 81 | 79.9 | 83.9 | 76.9 | 65.3 |
| தேறியலாப/(நட்ட) விகிதம் % | 9 | 6.0 | 4.2 | 7.0 | 4.3 |
| நடைமுறை விகிதம் | 9.63:1 | 8.32:1 | 8.6:1 | 7.2:1 | 6.9:1 |
| விரைவு விகிதம் | 9.53:1 | 8.26:1 | 8.6:1 | 6.9:1 | 6.6:1 |
| ஈடுபடுத்திய மூலதனம் மீதான வருவாய் | 1.12 | 0.68 | 0.43 | 0.48 | 0.63 |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறமையீன்மைகள்

| | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவக் கருத்துரை** | **சிபாரிசு** |
|---|---|---|---|
| (அ) | குத்தகைதாரருடனான குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம், குத்தகைதாரரர் பற்றுச்சீட்டு கிடைக்கப்பெற்று 14 நாட்களுக்குள் ஏதாவது சந்தர்ப்பத்தில் அடுத்துவரும் மாதத்தின் 20வது திகதிக்கு பிந்தாது | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு சபையின் அதிகாரத்துடன் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. காலதாமதமாக்கப்பட்ட வாடகை கட்டணங்களுக்காக 2.5% இனை | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | அனைத்து நிலுவைகளையும் செலுத்த வேண்டும். எனினும், 17 குத்தகைதாரர்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 66,679,843 தொகையினை செலுத்தியிருக்கவில்லை. மேலும், பெறவேண்டிய கணக்குகளின் வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம், 11 குத்தகைதாரர்கள் 02 வருடங்களுக்கு மேலாக ரூபா 18,605,586 தொகையினையும் 07 குத்தகைதாரர்கள் 01 வருடம் தொடக்கம் 02 வருடங்கள் வரையிலான வருடங்களுக்கு மேலாக ரூபா 15,885,845 தொகையினையும் மேலதிக நடவடிக்கையினை எடுக்காமல் வைத்திருந்தனர். | தண்டப்பணமாக அறவிடுதல். குறிப்பிடப்பட்ட திகதியில் சிட்டைகள் செலுத்தப்படாது விட்டால் இணைப்புக்கள் துண்டிக்கப்படுதல். மேலும், கம்பனியின் சட்டத்திணைக்களமானது நீண்டகால நிலுவை வாடகைதாரருக்காக கோரல் கடிதங்களை (எல்ஓடி) அனை அனுப்பியிருந்ததுடன் அதற்குப் பின்னரும் தீர்க்கப்படாது விட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | குத்தகைதாரருடனான குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம், குத்தகைதாரர் மாதாந்த குத்தகைக் மூன்று மாதத்திற்கு தொடர்ச்சியாக கட்டணத்தை கட்டத் தவறினால் வாடகை உடன்படிக்கை தானாக இல்லாமல் போவதுடன் பிணைவைப்பு திரும்பப் பெறப்படும். எனினும், பிணை வைப்பினை திரும்பப் பெறுவதற்கோ வணிகத்தினை கைவிட்ட 02 வாடகைதாரரிடமிருந்து மிகுதித் தொகையை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பிரிவானது புதிதாக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளில் மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ளது. முன்பு கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் இந்தப் பிரிவு இருக்கவில்லை. | குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஆரம்பத்திட்டத்தின் பிரகாரம், பச்சை எண்ணக்கருவுடன் மேல்ப்பரப்பிலுள்ள திறந்த பிரதேசத்தில் மரங்களை நடுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டது. எனினும், ஆரம்பத்திலிருந்து கம்பனியால் இது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. | ஆரம்பத்திட்டத்துடன் இணங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டிற்காக சுரங்கப்பாதை தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா 45,847,479 ஆகவிருந்தது. எனினும், மூலப்பொருள், ஊழியம், விசுவாசம் மற்றும் ஏனையவற்றிலிருந்து பெறப்பட்ட மொத்த செயற்பாட்டுக் கிரயம் ரூபா 46,268,500 ஆகவிருந்தது. கம்பனியானது 2022 ஆம் ஆண்டின் போது சுரங்கப்பாதை தொழிற்பாடுகளிலிருந்து ரூபா 421,021 | இணங்கப்பட்டதுடன் இயக்குனர் சபைக் கூட்டங்களில் சபையானது எவ்வாறு இதனை இலாகரமாக மாற்றுவது என கலந்தாலோசித்தது. நீண்டகாலத்திற்கு இது சாத்தியமற்றிருந்தால் சுரங்கப்பாதை தொழிற்பாடுகள் மூடுவது தொடர்பில் சட்ட ஆலோசனை எடுத்த பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். | சுரங்கப்பாதை தொழிற்பாட்டை இலாபம் ஈட்டக்கூடிய நிறுவனமாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

நட்டத்தினை விளைவித்திருந்தது. இத்தகைய பிரான்சிஸ் கம்பனியிடமிருந்து பெறப்பட்ட அத்தகைய குறைந்த வருமானம் கம்பனிக்கு நிதிரீதியில் சாத்தியமற்றதாகவிருந்தது.

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையீன்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| கம்பனியானது தனிப்பட்ட தரப்பினரிடமிருந்து கிட்டத்தட்ட 8-9 வருடங்களாக சேவை இடத்திற்காக தண்ணீர் பவுசர்களை எடுக்கின்றது. எனினும், நீர் பம்பர் வழங்குனருக்கும் இடையில் விலை மாற்றங்கள், விதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் எந்தவொரு உடன்டினக்கையுமில்லாதிருந்தது.<br>கம்பனியானது எந்தவித எழுத்துமூல உடன்படிக்கையுமில்லாமல் 2017 இலிருந்து தனியார் கம்பனியிடமிருந்து லிற்றோ காஸ் இனை கொள்வனவு செய்தது. | இணங்கப்பட்டது. கம்பனியானது நீர்வளச் சபையிடமிருந்து நீரினை கொள்வனவு செய்வதற்கு முயற்சிசெய்ததுடன் ரூபா 8400 இல் நீர்ப்பம்புகளை (14000) வழங்குவதில் தனியார் நீர் வழங்குனர் இருந்த அதேநேரம் நீர்பவுசர்களின் (7500 லீற்றர்கள்) விலையானது அந்நேரம் ரூபா 7,060.50 ரூபாவாகவிருந்ததுடன் அவர் ஆர்கேட்டுக்கு தொடர்ச்சியாக சேவையை வழங்கிக்கொண்டிருந்தார்.<br>மேலும், நீர்ச்சபையானது பாதகமான காலநிலையின் போது நீர் வழங்கல் மேற்கொள்வதை உறுதிப்படுத்தாது என நீர்ச்சபை அறிவித்திருந்தது.<br>லிற்றோவானது எஸ்எல்ஜசீ குழவிற்கு கீழ்(அதே தலைமைக் கம்பனியின் கீழ்) இருப்பதால் கன்வினானது 2017 இலிருந்து லிற்றோவிடமிருந்து காஸ் சிலின்டர்களை கொள்வனவு செய்கின்றது. அத்துடன், 2022 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட காஸ் பற்றாக்குறை இன் போதும் கூட லிற்றோவினால் காஸ் வழங்கலிற்கு இடையூறு ஏற்படாமல் தரமுடிந்தது. மேலும், லிற்றோவானது ஏனைய வழங்குனர்களுடன்(லாப்காஸ்) லிற்றோவானது சந்தையில் ஒப்பிடும் போது குறைந்த விலையில் வழங்குகின்றது. | தேவையான விதிகள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கி எழுத்துமூல உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்திய வளங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | வலிப்பன்ன சேவைப்பிரிவிலுள்ள பகுதி ஏ மற்றும் பீ இரண்டு பிரிவிகளிலுமுள்ள 50 கடைகளில் 2023 யூலை 31 இல் உள்ளவாறு 6 கடைகள் வெற்றிடமாகவிருந்தது. | இணங்கப்பட்டதுடன் 06 கடைகளில் 03 கடைகள் 2023 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து குத்தகைக்கு கொடுக்கப்பட்டதுடன் தற்போது விராஜா கை விசன் உடன் குத்தகை உடன்படிக்கையை இரத்து செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த இரண்டு கடைகளுடன் இரத்துநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் குத்தகைதாரருக்கு விடப்படும். | அனைத்துக் கடைகளையும் குத்தகைக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிர்வாக அலுவலகம், களஞ்சியங்கள் மற்றும் வீஐபீ கழிவறைகள் ''ஏ'' பிரிவின் மேல் தளத்தில் மாத்திரம் அமைந்திருந்ததுடன் நீண்டகாலத்திலிருந்து அந்தத் தளத்தில் ஒதுக்கப்படாது குறிப்பிடத்தக்க பெரிய பிரதேசம் உள்ளது என அவதானிக்கப்பட்டது. கட்டடி பிரதேசத்தை வினைத்திறனாக பயன்படுத்தாமையால் அவர்கள் பெறவேண்டியிருந்த வாடகை வருமானத்தை இழந்திருந்தனர். | 2018 இற்கு முன்னர் உணவகங்களிற்காக மேல்தளம் வாடகைக்கு விடப்பட்ட போதிலும் மேல்தளத்திற்கு குறைவான வாடிக்கையாளர்கள் வந்தமையால் குத்தகைதாரர்கள் வெளியேறினர். | இருக்கின்ற இடங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2023 யூலை 26 இல் கணக்காய்வால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் பிரகாரம் ''ஏ'' பிரிவில் 5 ஏரிம் இடங்கள் இருந்தது என அவதானிக்கப்பட்டது. ஆனால், 03 ஏரீம்கள் மாத்திரம் செயற்பாட்டிலிருந்தது. ஆகையால், 02 ஏரீஎம் இடங்கள் கணக்காய்வுத்திகதியிலுள்ளவாறு வெற்றடமாகவிருந்தது. | இணங்கப்பட்டதுடன் கம்பனியானது மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி (பீஓசீ) போன்றவற்றை வெற்றிடமாகவுள்ள பிரதேசத்தில் ஏரீம் அல்லது சீஆர்எம் ஐ தாபிப்பதற்கு கேட்டுக்கொண்டது. எனினும், மக்கள் வங்கியானது தற்போது நாட்டில் புதிய ஏரீஎம் அல்லது சீஆர்எம் இல்லை என வாய்மொழியில் அறிவித்திருந்தது. தற்போதுள்ள புதிய சீஆர்எம் இயந்திரங்கள் வெப்பத்திற்குரியதாகவுள்ளதுடன் சுமுகமான சேவையை வழங்குவதற்கும் இயந்திரத்தின் பயன்தரு காலத்தை அதிகரிப்பதற்கும் தடைப்படாத காற்று அவசியமென இலங்கை வங்கி அறிவித்திருந்தது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | செயற்பாடு இல்லாமல் இரண்டு பக்கங்களிலும் சேவைப்பிரிவில் இரண்டு எல்ஈடி பனல் இருந்தது என அவதானிக்கப்பட்டது. வெலிப்பன சேவைப்பிரிவிலிருந்த எல்ஈடி பிரிவுடன் தொடர்புள்ள எந்த ஆவணங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கம்பனிக்கு காணியை குத்தகைக்கு விட்ட பின்னர் ஆர்டீஏ ஆல் இது நிர்மாணிக்கப்பட்டது என கம்பனியின் உத்தியோகத்தர்களுடன் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது. எனினும், கம்பனியானது கம்பனிக்கு அத்தகைய சொத்துக்களை மாற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அதனால் மேலதிக இலாபத்தினை உழைப்பதற்கும் தவறியிருந்தது. | இணங்கப்பட்டதுடன் இந்தப் பிரச்சனையை தீர்ப்பதற்கு கம்பனியின் முகாமைத்துவமானது ஆர்டீஏ யுடன் கலந்தாலோசித்தது. பின்பு, கம்பனியிடமிருந்து ஏதும் எதிர்ப்பு வந்தால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் உரிமையாக்கப்பட்ட காணிக்கு எல்ஈடி பனல்களை மாற்றுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை இணங்கியிருந்தது. கம்பனி அவர்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தினால் வீதி அபிவிருத்தி அதிகார சபையானது இந்த எல்ஈடி பனல்களை நகர்த்துவதற்காக காணி அளவையை மேற்கொள்வதற்கு தலைவரின் அனுமதியை கேட்டதுடன் அது வழங்கப்பட்டிருந்தது. அதனைத்தொடர்ந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் காணி அளவையை மேற்கொண்ட பின்னர் உடனடியாக மேலதிக நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இரு தரப்பினர்களும் ஏற்றுக்கொண்டனர். | வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் ஒரு தீர்வுக்கு வரவேண்டும். |
| (உ) | கனோவின் ஆர்கேட்(சேவைப் பிரிவு) பகுதி ஏ இல் 2015 இல் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தியாக்கப்பட்ட கழிவு நீர் பரீட்சிப்பு பொறி கணக்காய்வு திகதியில் தொழிற்படாதிருந்ததுடன் முறையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. எண்ணைக் கழிவு நீர் இந்தப் பொறியினூடாக முறையாக பரீட்சிக்கப்படவில்லையெனவும் இந்தப் பொறியிலிருந்து உருவான சேறு அகற்றப்படவில்லையெனவும் கம்பனியின் உதவிப் பொறியியலாளர் வாய்மொழிமூலம் அறிவித்திருந்தார். எனினும், அத்தகைள தவறுகளை திருத்தும் நடவடிக்கை மீதான எந்த சீராக்கங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், சேற்றுத் தொட்டி மற்றும் இந்தப் பொறியிலுள்ள பாதுகாப்புப் புள்ளி குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | இணங்கப்பட்டதுடன் கழிவு நீர் பரீட்சிப்பு பொறியின் சேவைக்காக விலைமனுக்களை கம்பனி கோரியிருந்தது. | தேவைப்பாடுகளுக்கு இணங்க தொழிற்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | கனோவின் ஆர்காட் இல் (சேவைப் பிரதேசத்தில்) பிரிவு ஏ இல் ஒரு நாளைக்கு 60,000 அளவுடன் 2 நீர் நிரப்பிகள் மாத்திரம் இருந்தது எனவும் | இணங்கப்பட்டதுடன் 04 தொட்டிகளில் குழாய்கிணறிடமிருந்து எடுக்கப்பட்ட பிரிக்காத நீரினை சேமிப்பதற்கு 03 தொட்டிகள் பயன்படுத்தப்பட்டதுடன் | குடியிருப்பளர்களிற்கு தேவையான சேவையினை வழங்குவதன் மூலம் |

| | | |
|---|---|---|
| அவை நிரப்பிய பின்னர் நீரானது நீர்த் தொட்டிகளில் நீரானது சேமிக்கப்பட்டதுமெனவும் அவதானிக்கப்பட்டது. அங்கு களஞ்சியப்படுத்துவதற்காக ஒவ்வொன்றும் 10,000 லீற்றர்களுடன் 4 நீர்த்தொட்டிகள் இருந்தபோதிலும் 3 தொட்டிகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டது. எனினும், கம்பனியின் உதவிப் பொறியியலாளரால் குறிப்பிடப்பட்டவாறு சராசரி நாளாந்த நுகர்வானது 150,000 லீற்றர்களாகவிருந்தது. ஆகையால், பரீட்சிப்பு நீரின் வழங்கலானது சேவைப்பிரிவுகளின் நுகர்விற்காக போதியளவில் இருக்கவில்லை. | பிரித்த பின்னர் வேறு இறுதியாக, பிரித்த நீர் தானாக நீர் சம்புகளுக்குள் விடப்படுகின்றது. நாங்கள் நீரினைப் பெறுவதற்கு இரண்டு குழாய் கிணறுகளை வைத்திருப்பதுடன் அதனுடைய இயலளவு நாளாந்த நுகர்விற்கு போதியளவாகவிருக்கவில்லை. தற்போது, நாளொன்றுக்கு அண்ணளவாக அதனுடைய நாளாந்த நுகர்வு 150000 லீற்றர்களாகவிருப்பதுடன் (பகுதி ஏ 80000, பகுதி பீ 70000) அண்ணளவாக 35000 லீற்றர்கள் இரண்டு குழாய் கிணறுகளிடமிருந்தும் வெளியேற்றப்பட்டது. ஆகையால், வாடகை அடிப்படையில் பற்றாக்குறையான நீரினை கொள்வனவு செய்ய வேண்டும். மேலும், தற்போது செயன்முறையிலுள்ள வெலிப்பன சேவை வலயத்திற்கு குழாய் நீரினைப் பெறுவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கோரிக்கையொன்று வழங்கப்பட்டிருந்தது. | நீருக்கான கிரயத்தினைக் குறைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு பெறுகைத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இயக்குனர் சபையின் அனுமதி கணக்காய்வுத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | .இணங்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் இயக்குனர் சபையின் அனுமதி எடுக்கப்படும். | கம்பனியின் பெறுகைத்திட்டத்திற்காக அனுமதி எடுக்கப்படும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டிகளின் 4.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டதுடன் பெறுகைத் திட்டமானது சேவைகள் மற்றும் வேலைகளினை உள்ளடக்கி இனிமேல் தயாரிக்கப்படும். | முகாமைத்துவமானது பெறுகை வழிகாட்டிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையில் இருக்க வேண்டும். |
| (இ) | அரச பெறுகை வழிகாட்டிகளின் 6.3.3 (ஆ) இன் பிரகாரம் விலைமனுவின் காலாவதித் திகதி முடிவடைந்ததும் அதனை திறக்கும் போது வருகைதரக்கூடிய விலைமனுதாரர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளின் முன் அதனை திறப்பதற்கு கம்பனி தவறியது. | ஜீபீயூ இன் 6.3.3 (ஆ) இன் பிரகாரம் விலைமனு திறக்கும் போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | -மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பெறுகை ஆவணத்தின் 6.3.6 இலுள்ள விலைமனு திறத்தல் குறிப்புக்களிற்காக கொடுக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் விலைமனு குறிப்புக்கள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை கோவையின் 6.3.6 இல் கொடுக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் விலைமனு ஆரம்பித்தல் குறிப்புக்களை பராமரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | - மேற்படி - |
| (உ) | கம்பனியானது இந்தப் பெறுகைக்காக நியம விலைமனு ஆவணங்களை பயன்படுத்தியிருக்கவில்லை. மேலும், கம்பனியால் அனுப்பப்பட்ட விலைமனுதாரருக்கான அழைப்பிதழின் பிரகாரம் உரிய பெறுகைகளிற்கான விநியோகிக்கும் காலம், காலாவதிக்காலம், விலைமனு செல்லுபடியாகும் காலம், பிந்தைய விநியோக மாற்றங்கள் மற்றும் கடன் விதிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட விடயங்கள் தேவையான போது பெறுகைச் செய்முறையினூடாக கூட்டிணைக்கப்படும். | - மேற்படி - |

## 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | கம்பனிக்காக ஆட்சேர்ப்புக் கொள்கை இருந்த போதிலும் அதற்கான அனுமதி 2023 ஆகஸ்ட் 25 இலும் இயக்குனர் சபையிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டதுடன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஆட்சேர்ப்புக் கொள்கையின் மேலதிக கருத்துரைகள் மற்றும் மீளாய்வு 2023 மார்ச் 30 இல் கணக்காய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. கணக்காய்வுக் குழுவிடமிருந்து அனுமதி பெறுவதற்காக மாற்றப்பட வேண்டிய ஆட்சேர்த்தல் கொள்கை மற்றும் திறன் வடிவம் (வேலை விதப்புரைகள்) திருத்தப்பட வேண்டியுள்ளது. கொள்கையானது உரிய இயக்குனர் சபைக்கு அனுமதியைப் பெறுவதற்காக கணக்காய்வுக் குழுவின் அனுமதியைப் பெற்ற பின்னர் அனுப்பப்படும். | கம்பனியின் பெறுகைக் கொள்கைக்கு அனுமதி பெறப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் 11 வகைப்படுத்தலிற்காக கம்பனியின் ஒவ்வொரு ஊழியர்களிற்கும் வேலை விபரணத்திற்கான அனுமதி இருக்கவில்லை. மேலும், 04 ஊழியர்களின் வேலை விபரணம் 2023 ஆகஸ்ட் 24 அளவிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டதுடன் பெறுகைக்காள்கை மற்றும் திறன் படிவத்துடன் வேலை விபரணம் அனுமதிக்கப்பட வேண்டும். | -மேற்படி- |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

## 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| நிறுவனமானது கூட்டிணைந்த திட்டத்தை கணக்காய்வுத் திகதியளவில் தயாரித்து இருக்கவில்லை | கொள்கைத் திட்டமிடல் செயற்பாட்டினை வெளிக்களம் செய்ய முகாமைத்துவம் தீர்மானித்ததுடன் இதற்காக தகுதியான சேவை வழங்கும் உத்தியோகத்தரை கண்டுபிடிக்கும் செய்முறை தற்போதுமுள்ளது. அது தற்போது வரைக்கும் செயன்முறையிலுள்ளது. | கூட்டிணைந்த திட்டமானது அதனுடைய தந்திரோபாய நோக்கங்களை அடைவதற்காக தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வானது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | கனோவின் ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் கம்பனியின் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகளை ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்பரேசனினுடைய கணக்காய்வு உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |